THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 4th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI **S. CHELLAPANDIAN) in the Chair.**

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

டாக்டர் அம்பேத்காருடைய நூல்கள்.

***61 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) கனம் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில புத்தகங்களைத் தமிழாக்கி எல்லா நூலகங்களுக்கும் கொடுக்கவும், வேண்டுமென்கிறவர்களுக்கு விலைக்குக் கொடுக்கவும் திட்டம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில் எப்பொழுது அத் திட்டம் மேற்கொள்ளப் படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் சுய சரித்திரம் நம்முடைய நூலகத்தில் கூட இருக்கிறது. அவர்களுடைய புத்தகங்களை ஆதித்திராவிட மக்கள் படித்தால், பிற்காலத்தில் அவர்களுடைய வாழ்க்கைக்கு அது உதவியாக இருக்கும். ஆனால், கனம் அமைச்சர் ‘ இல்லை ’ என்று சொல்லுகிறார்கள். அந்த விஷயத்தை மறுபரிசிலனை செய்து, அவர்கள் என்ன என்ன கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, அந்தப் புத்தகங்களை தமிழாக்கி, எல்லா நூலகங்களிலும் வைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டாக்டர் அம்பேத்கார் நூல்கள் என்று சொன்னால், எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. என்னென்ன புத்தகங்களை மொழி பெயர்க்க வேண்டும். எதைப் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. அதையெல்லாம் கவனிக்க (Bureau of Tamil Publications) தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் என்று இருக்கிறது. இன்னும் வேறு ஸ்தாபனங்களும் இருக்கின்றன. அவ்வப்பொழுது அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

[4th August 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், டாக்டர் அம்பேத்கார் புத்தகம் என்று சொன்னால், அவர் அரசியல் சட்டம் எழுதியதைப் பற்றிச் சொல்லவில்லை. அரிஜனங்களுக்கும், அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய உரிமையைக் காத்துக் கொள்ளவும் அம்பேத்கார் ஒரு புது அணுகும் வழியைக் கையாண்டார்கள். அதனால் காந்திஜிகூட அவரோடு பேசி ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, அப்படிப்பட்ட புத்தகங்களை மொழி பெயர்க்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா? அல்லது யாராவது தனியார் முயற்சி எடுத்தால், சர்க்கார் உதவி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கேள்வி கேட்ட அங்கத்தினருடைய உள்ளக் கருத்தைப்பற்றி, உப கேள்வி கேட்ட கனம் அங்கத்தினர் தெரிவித்ததற்காக அந்த கனம் அங்கத்தினர் சார்பாக நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கிறேன். (சிரிப்பு) அரிஜன நல இலாகா அவ்வப்பொழுது பிரசுரங்கள் வெளியிடுகிறது. அதையும் பார்க்கலாம். என்னென்ன புத்தகங்கள் அறிவு வளர்ச்சிக்கு அவசியம் என்று கருதப்படுகிறதோ, அவை தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தாலும் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு இலாகாவும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், டாக்டர் அம்பேத்கார் திரு உருவப் படங்களைச் சர்க்கார் பணி மனைகளிலும், நீதி மன்றங்களிலும் வைக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கிய கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழுவதில்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : டாக்டர் அம்பேத்கார் ஒரு சிறந்த அறிவாளி. இன்னது என்று இல்லாமல், அவர்களுடைய எல்லாப் புத்தகங்களையுமே தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும் என்று அரசு வழி வகை செய்யுமா? தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு அந்தக் கருத்தைத் தெரிவிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் முதலிலேயே சொன்னேன். அறிவாளிகள் பல பேர் இருக்கிறார்கள். பல புத்தகங்கள் எழுதியிருக்கலாம். அவற்றில் எவற்றையெல்லாம் மொழி பெயர்த்தால் நலம் என்று தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் ஆராய்ந்து செய்கிறது.

'சுதந்திரப் போராட்ட வீரர்கள் யார் யார்?'

* 62 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் தேசீய சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகளின் தொகுப்புப் புத்தகம் வெளியிட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா?